## பொய்களை மட்டுமே பரிசாக தரும் பிரதமர் மோடிக்கு

# ஏமாற்றத்தை பரிசாக தர நாடு தயாராகி விட்டது





தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரத்தில் நேற்று நடந்த இந்தியா கூட்டணியின் தேர்தல் பிரசார பொதுக்கூட்டத்தில் தூத்துக்குடி வேட்பாளர் கனிமொழி, ராமநாதபுரம் வேட்பாளர் நவாஸ் கனி ஆகியோரை ஆதரித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் வாக்கு சேகரித்தார். அடுத்த படம்: முதல்வரின் உரையை கேட்க கடலென திரண்ட மக்கள் வெள்ளம்.

### எட்டயபுரம் பிரசாரத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி

சென்னை, மார்ச் 27: மக்களால் முதலமைச்சரான என்னிடமே பொய் சொன்னவர்தான் பிரதமர் மோடி. பொய்களை மட்டுமே பரிசாக தரும் பிரதமருக்கு, ஏமாற்றத்தைப் பரிசாக தர ஒட்டுமொத்த இந்தியாவும் தயாராகி விட்டது என முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசினார்.

தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசார பொதுக்கூட்டத்தில், தூத்துக்குடி திமுக வேட்பாளர் கனிமொழி, ராமநாதபுரம் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் வேட்பாளர் நவாஸ் கனி ஆகியோருக்கு ஆதரவாக வாக்கு கேட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

கடந்த அதிமுக ஆட்சியில், தூத்துக்குடி என்றாலே நமக்கு நினைவுக்கு வந்தது எது? துப்பாக்கிச் சூடு. 13 பேர் அநியாயமாக் கொல்லப்பட்டதை மறக்க முடியுமா? அப்படியொரு மனிதநேயமற்ற கொடூரமான துப்பாக்கிச் சூட்டை நடத்தியவர்தான் பழனிசாமி. தமிழ்நாட்டு வரலாற்றில் அதிமுக ஆட்சியால் வைக்கப்பட்ட மிகப்பெரிய கரும்புள்ளி. துயரமும் - கொடூரமுமான அந்த சம்பவத்தை இப்போது நினைத்தாலும் நெஞ்சமெல்லாம் பதறுகிறது.

'பச்சைப்பொய் பழனிசாமி' என்று மக்கள் சும்மாவா சொன்னார்கள். பழனிசாமிக்குத் தெரிந்துதான் துப்பாக்கிச் சூடு நடந்தது என்று ஆணையம் ஆதாரப்பூர்வமாக கூறியிருக்கிறது. ஊடகங்கள் மூலமாகத்தான் துப்பாக்கிச் சூடு சம்பவம் பற்றி தெரிந்து கொண்டதாகப் பழனிசாமி கூறியது தவறானது என்று ஆணையத்தின் அறிக்கையில் வெட்ட வெளிச்சம் ஆகிவிட்டது. ஒரு ஆட்சி நிர்வாகம் எவ்வளவு இரக்கமில்லாமல் எப்படி நடக்கக் கூடாது என்பதற்கு எடுத்துக்காட்டு கடந்த அதிமுக ஆட்சி.

ஆனால், பாதிக்கப்பட்ட குடும்பங்களின் கண்ணீரைத் துடைத்து, அவர்களின் வாழ்க்கையில், ஒளி வீசும் உதவிகளைச் செய்து இருக்கிறதுதான் நம்முடைய திமுக ஆட்சி.

திமுகவுக்கும் - அதிமுகவுக்கும்தான் போட்டி என்று கூறியிருக்கிறார். அந்தளவிற்காவது பழனிசாமிக்குப் புரிதல் இருக்கே என்று, எனக்கு மகிழ்ச்சி. நடப்பது நாடாளுமன்றத் தேர்தல். மோடியைப் பற்றி பாசாங்கிற்காககூட பத்து சொற்களை பேசாத பாதம் தாங்கி பழனிசாமிதான், தமிழ்நாட்டைக் காப்பாற்ற போகிறாராம்; உரிமைகளை மீட்கப் போகிறாராம். பாதம்தாங்கி பழனிசாமி ஒருபக்கம் என்றால்... அவரின் 'ஓனர்' மோடி மற்றொரு பக்கம் வந்திருக்கிறார். தமிழ்நாட்டு மீனவர்கள் மீதான தாக்குதல்களைத் தட்டிக் கேட்க நீங்கள் தயங்குவது ஏன்? பாதிக்கப்படுவது தமிழ்நாட்டு மீனவர்கள் என்பதாலா? தமிழ்நாட்டிற்குக் கொடுத்த எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றாமல், அவர் கொண்டுவரும் திட்டங்களுக்கு நான் தடையாக இருந்தேன் என்று கூறுகிறார்.

> மக்களால் முதலமைச்சரான என்னிடமே பொய் சொன்னவர்தான் பிரதமர் மோடி.

மக்களுக்கான பல்வேறு நலத்திட்டங்களையும் - சாதனைகளையும் ஒவ்வொரு நாளும் செய்த அந்த துணிச்சலுடன்தான் இந்த 'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்' உங்களிடம் வாக்கு கேட்டு வந்திருக்கிறேன். சும்மா அல்ல, தெம்போடு, துணிச்சலோடு நிற்கிறேன். யாரைப் பற்றியும் கவலைப்படாமல் நிற்கிறேன்.

நம்முடைய இந்தியா கூட்டணி ஆட்சி அமைந்ததும் என்னவெல்லாம் செய்யப் போகிறோம் என்று தேர்தல் அறிக்கையாக வெளியிட்டிருக்கிறோம்.

இரண்டு மாபெரும் இயற்கைப் பேரிடரை கடந்த டிசம்பர் மாதம் சந்தித்தோம். இதனால் ஏற்பட்ட பாதிப்புகளைச் சரி செய்ய 37 ஆயிரம் கோடி ரூபாய் நிதியை கோரினோம். ஒன்றிய அரசிடமிருந்து நிதி வரவில்லை. ஆனால், அதை ஒரு காரணமாக நாங்கள் மக்களிடம் கூறவில்லை. மோடி தரவில்லை என்றால் என்ன? உங்களில் ஒருவனான இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தருவேன் என்ற உங்கள் நம்பிக்கையைக் காப்பாற்றினேன்.

> திமுகவுக்கும் - அதிமுகவுக்கும் தான் போட்டி என்று எடப்பாடி பழனிசாமி கூறியிருக்கிறார். அந்தளவிற்காவது பழனிசாமிக்குப் புரிதல் இருக்கே என்று எனக்கு மகிழ்ச்சி.

வெள்ளம் பாதித்த போது, டெல்லியில் இருந்து அழைப்பு வந்தது. தொலைபேசியில் என்னிடம் பேசிய பிரதமர் மோடி என்ன கூறினார் தெரியுமா? வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட அமைச்சர் நிர்மலா சீதாராமனை அனுப்பி இருக்கிறேன், அவர் பார்வையிட்ட பிறகு, நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று கூறினார். ஆனால், நிர்மலா சீதாராமன் வந்துவிட்டு சென்றார். கொடுத்தாரா? கொடுக்காவிட்டாலும் பரவாயில்லை. அங்குச் சென்று என்ன சொன்னார்? மக்களுக்கான உதவிகளைப் பிச்சை என்று மனசாட்சியே இல்லாமல் ஆணவத்துடன் கொச்சைப்படுத்தினார்.

பிரதமர் பதவியில் இருப்பவர் கூறினாரே என்று நம்பினேன். வழக்கமாக, மக்களுக்குக் கூறும் பொய்யைத்தான் எனக்கும் பரிசாகக் கொடுத்தார். மக்களால் முதலமைச்சரான என்னிடமே பொய் சொன்னவர்தான் பிரதமர் மோடி. பொய்களை மட்டுமே பரிசாகத் தரும் பிரதமருக்கு, ஏமாற்றத்தைப் பரிசாக தர தயாராகிவிட்டீர்களா? தமிழ்நாட்டு வழியில் ஒட்டுமொத்த இந்தியாவும் தயாராகி விட்டது. மோடிக்கான தோல்விப் பரிசு தூத்துக்குடியிலும், ராமநாதபுரத்திலும் தயாராகிவிட்டது தானே?

அதற்கு, தூத்துக்குடி நாடாளுமன்றத் தொகுதியின் வெற்றி வேட்பாளர் கனிமொழிக்கு உதய சூரியன் சின்னத்தில் வாக்களிப்பீர். ராமநாதபுரம் நாடாளுமன்றத் தொகுதியில் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் வேட்பாளர் நவாஸ் கனிக்கு ஏணி சின்னத்தில் வாக்களிப்பீர்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

## நீண்ட இழுபறிக்கு பின்பு

# மயிலாடுதுறை வேட்பாளராக வழக்கறிஞர் சுதா அறிவிப்பு



மகிளா காங்கிரஸ் தலைவிக்கு அடித்தது ஜாக்பாட்

சென்னை, மார்ச் 27: நீண்ட இழுபறிக்கு பின்பு மகிளா காங்கிரஸ் தலைவி வழக்கறிஞர் சுதா மயிலாடுதுறை வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

திமுக கூட்டணியில் காங்கிரஸ் கட்சிக்கு 9 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளது. மொத்தம் உள்ள 9 தொகுதிகளில் 5 தொகுதிகளுக்கு சிட்டிங் எம்பிக்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. மீதமுள்ள 4 தொகுதிகளுக்கு கடும் போட்டி ஏற்பட்டது. இதில் திருவள்ளூர் தொகுதிக்கு சசிகாந்த் செந்தில், கடலூர் தொகுதிக்கு ஆரணி தொகுதி எம்பியாக இருந்த விஷ்ணுபிரசாத்துக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது.

நெல்லை, மயிலாடுதுறை ஆகிய தொகுதிகளுக்கு மட்டும் புதியவர்கள் பலரும் மேலிடத்துக்கு கடும் அழுத்தம் கொடுத்ததால் வேட்பாளர்களை இறுதி செய்ய முடியாமல் டெல்லி மேலிடம் திணறியது. இதனால் இந்த இரண்டு தொகுதிகளுக்கு மட்டும் வேட்பாளர்கள் தேர்வை நிறுத்தி வைத்திருந்தது. இதற்கிடையில் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து திமுக தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் சூறாவளி சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறார்.

இதற்கிடையில், திருநெல்வேலி தொகுதியில் நேற்று முன்தினம் பிரசாரம் செய்த நிலையில் அன்றைய தினம் வரை காங்கிரஸ் வேட்பாளர் யார் என அறிவிக்கப்படாமல் இருந்தது. இந்த தகவல் மேலிடத்துக்கு தெரிவிக்கப்பட்ட நிலையில் உடனடியாக ஆலோசனை மேற்கொண்டு நெல்லை வேட்பாளராக ராபர்ட் புரூசை அறிவித்தனர்.

மயிலாடுதுறை தொகுதிக்கு மேலிட செல்வாக்குடன் பிரவீன் சக்கரவர்த்தி, எஸ்.பி. ரமணி மற்றும் தமிழக காங்கிரஸ் பரிந்துரையின் படி நாசே ராமச்சந்திரன் ஆகியோருக்குஇடையே கடும்போட்டி நிலவியது. சிட்டிங் எம்பிக்களான டாக்டர் செல்லக்குமார், திருநாவுக்கரசர் ஆகியோரும் மேலிடத்துக்கு கடும் அழுத்தத்தை கொடுத்தனர். இதனால் வேட்பாளர்களை தேர்வு செய்ய முடியாமல் தொடர்ந்து இழுபறி நீடித்து வந்தது.

இந்நிலையில், மயிலாடுதுறைக்கான வேட்பாளரை டெல்லி மேலிடம் நேற்று அறிவித்தது. இந்த பட்டியலில் தமிழ்நாடு மகிளா காங்கிரஸ் தலைவி வழக்கறிஞர் சுதாவை வேட்பாளராக அறிவித்துள்ளது.

இதையடுத்து காங்கிரஸ் வேட்பாளர்கள் பட்டியல் முழுவதுமாக வெளியிடப்பட்டுள்ளது. காங்கிரசுக்கு தமிழகம், புதுவையில் மொத்தம் 10 தொகுதிகள் ஒதுக்கப்பட்டன. அதில் 2 பெண் வேட்பாளர்கள். விளவங்கோடு சட்டப்பேரவைக்கும் பெண் வேட்பாளர் நிறுத்தப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.


**நிடோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட்** nido HOME FINANCE

(முன்னதாக எடெல்வீஸ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என அறியப்பட்டது)
பதிவு அலுவலகம்: டவர் 3, 5வது தளம், விங்க் 'B' கோஹினூர் சிட்டி மால், கோஹினூர் சிட்டி, கிரோல் சாலை, குர்லா (மேற்கு) மும்பை 400 070. மண்டல அலுவலகம்: எண்.19, 7வது தளம், கோச்சார் டவர்ஸ். வெங்கட்நாராயணா சாலை, தி.நகர், சென்னை 600 017.

**சர்ஃபாஸி சட்டம், 2002 இன் கீழ் விதி 8(1) இன்படி சுவாதீன அறிவிப்பு**

இவ்வாறிருக்க கீழே கையொப்பமிட்டவர் நிடோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட் (முன்னதாக எடெல்வீஸ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என அறியப்பட்டது) அதிகாரப்பூர்வ அதிகாரியாக இருக்கிறபடியால் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (2002 இன் 54) கீழ் மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 3 உடன் பிரிவு 13(12) கீழ் தமக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி கடன்தாரர்கள் (கீழ்க்காணும் பெயர்களும் முகவரிகளும்) மேற்கூறிய அறிவிப்பு கிடைக்கப் பெற்ற தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்தக் கோரி அழைப்பு விடுத்திருந்தார்.
கடன்தாரர்கள் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியுள்ளனர். இதன்மூலம் கடன்தாரர்கள் மற்றும் பொதுவாகப் பொதுமக்களுக்கு வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே கையொப்பமிட்டவர் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8 உடன் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13 (4) இன் கீழ் அவருக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி இங்கே கீழே விவரிக்கப்பட்ட சொத்தினை கையக சுவாதீனம் செய்துள்ளார்.
கடன்தாரர்களுக்குக் குறிப்பாகவும் மேலும் பொதுமக்களுக்குப் பொதுவாகவும் இதன்மூலம் எச்சரிக்கப்படுவதாவது: சொத்துடன் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ள வேண்டாம் என்றும் மேலும் சொத்துடனான அனைத்து நடவடிக்கைகளும் மற்றும் அதற்கான வட்டி ஆகியவை நிடோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட் (முன்னதாக எடெல்வீஸ் ஹவுசிங் லிமிடெட் என அறியப்பட்டது) வசூலுக்கு உட்படும்.
கடன்தாரர்கள், உப கடன்தாரர்கள், ஜாமீன்தாரர்கள், நிலுவைத்தொகை, கோரிக்கை அறிவிப்பு ஆகியவை சட்டத்தின் பிரிவு 13 (2) இன் கீழ் கொண்டுவரப் படுகின்றன.

1. கடன்தாரர், உப கடன்தாரர், ஜாமீன்தாரர் ஆகியோரின் பெயர் மற்றும் முகவரி மேலும் கடன் தொகை
பானுமதி S (கடன்தாரர்) & சுந்தர் T (உப கடன்தாரர்) சர்வேஷ் பிளாட்ஸ், மனை எண். F2, முதல் தளம், கதவு எண். 3/5, கண்ணன் காலனி, முதல் தெரு, பழவந்தாங்கல், ஆலந்தூர், சென்னை 600016.
கடன் கணக்கு எண். LCHETH0000025723 கடன் ஒப்பந்த நாள்: 12 ஜூன் 2017
கடன் தொகை: ரூ. 20,00,000/– (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்) கோரிக்கை அறிவிப்பு தேதி: 14.03.2022 செயல்படா சொத்து நாள்: 04.01.2022
செலுத்த வேண்டிய தொகை: ரூ. 22,26,069.39/– (ரூபாய் இருபத்து இரண்டு இலட்சத்து இருபத்து ஆறாயிரத்து அறுபத்து ஒன்பது மற்றும் பைசா முப்பத்து ஒன்பது மட்டும்) சுவாதீன நாள்: 23.03.2024

கடனீட்டு சொத்தின் அட்டவணை: மனை எண். F2. இதன் முதல் தளத்தில் 455 ச.அடி சிறப்பு கட்டுமான பகுதியானது கார் பார்க்கிங் மற்றும் பொதுப் பகுதி ஆகியவற்றுடன் 1200 ச.அடி நிலத்தின் பிரிக்கப்படாத 200 ச.அடி பரப்பானது, கதவு எண்.3/5, கண்ணன் காலனி, முதல் தெரு, ஆலந்தூர், காஞ்சிபுரம்–600016 இல் கிராம நத்தம் சர்வே எண். 46/1a, பட்டா C.A. 506/2014, பட்டாவின்படி புதிய T.S. எண்.92, வார்டு எண். A, பிளாக் எண்.3 ஆனது பழவந்தாங்கல் கிராமம், தாம்பரம் தாலுகா, தற்போது ஆலந்தூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ளது. எல்லைகள்: வடக்கு: திரு.ரஹமத்துல்லா நூர்ஷாப்துல் அலீமுக்கு சொந்தமான சொத்து, தெற்கு: திரு. கிருஷ்ணனுக்கு சொந்தமான சொத்து, கிழக்கு: கண்ணன் காலனி முதல் தெரு, மேற்கு: கிரீன் பீஸ் அடுக்குமாடி குடியிருப்பு. அளவீடு: கிழக்கு மேற்காக வடக்கு பக்கம்: 60 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பக்கம்: 60 அடி, வடக்கு தெற்காக கிழக்கு பக்கம்: 20 அடி, வடக்கு தெற்காக மேற்கு பக்கம்: 20 அடி பகுதியானது ஆலந்தூர் சார் பதிவு மாவட்டம் சென்னை தெற்கு பதிவு மாவட்டத்துக்குள் அமைந்துள்ளது.

இடம்: ஆலந்தூர்/காஞ்சிபுரம்
தேதி: 27.03.2024
ஒம்/– அதிகாரப்பூர்வ அதிகாரி
நிடோ ஹோம் பைனான்ஸ் லிமிடெடுக்காக
(முன்னதாக எடெல்வீஸ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என அறியப்பட்டது)



**சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்**
CUB TRUST AND EXCELLENCE SINCE 1904
கடன் வசூல் மற்றும் நிர்வாகத் துறை
நிர்வாக அலுவலகம் : எண்.24-B, காந்தி நகர், கும்பகோணம் - 612001. மின்னஞ்சல்: crmd@cityunionbank.in, போன்: 0435-2432322, ஃபேக்ஸ்: 0435-2431746

**கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் / நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002-ன் படி டெண்டருடன் கூடிய மறு ஏல விற்பனை அறிவிப்பு**

சிட்டி யூனியன் வங்கியின் கடன்காரர்கள் / ஜாமீன்தாரர்களாகிய 1.M/s.கோல்டன் ஸ்டீல்ஸ், எண்.23 (பழைய எண் 11), செம்புதாஸ் தெரு, மண்ணடி, சென்னை-600001. 2.திரு.A. அருண்குமார், த/பெ.ஏஞ்சல் அலெக்ஸிஸ், எண்.14, பெருமாள் கோவில் தெரு, பூதப்பேடு, ராமாபுரம், அம்பத்தூர், திருவள்ளூர், தமிழ்நாடு-600089. 3.திரு. நாசர் லியாகத் அலி, த/பெ.லியாகத் அலி, எண்.5/11, சவரி முத்து தெரு, மண்ணடி, சென்னை - 600001. 4.திரு.K. ஏஞ்சல் அலெக்ஸிஸ், த/பெ.குழந்தைசாமி, எண்.14, பெருமாள் கோவில் தெரு, பூதப்பேடு, ராமாபுரம், அம்பத்தூர், திருவள்ளூர், தமிழ்நாடு - 600089 ஆகியோர் பெற்ற கடன் நிலுவை தொகை 07.01.2024 அன்றுள்ளபடி ரூபாய்.1,12,06,418/- (ரூபாய் ஒரு கோடி பன்னிரெண்டு லட்சத்து ஆறாயிரத்து நானூற்று பதினெட்டு மட்டும்) மற்றும் 08.01.2024 முதல் பின்வட்டி இதர செலவுகள் ஆகிய மொத்த தொகையை வசூலிக்கும் பொருட்டு வங்கியில் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்துக்களை 2002 ஆம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம் விதி 8(6) 9 இன் கீழ் சிட்டி யூனியன் வங்கியின் அதிகாரப்பூர்வ அதிகாரி அவர்களால் சீலிடப்பட்ட டெண்டருடன் கூடிய ஏல விற்பனை அடிப்படையில் விற்பனை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**வங்கிக்கு அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்து விபரம்**
**(K.ஏஞ்சல் அலெக்ஸிஸ் அவர்களுக்கு சொந்தமான சொத்து)**

திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் தாலுக்கா, போரூர் கிராமம், சென்னை - 600116, பெருமாள் கோவில் தெரு, பூதன்பேடு, சர்வே எண் 22/1, கதவு எண் 14, 1240 சதுரடி கொண்ட நிலம் மனை எண்.3, 2709 சதுரடி கட்டிடம் (தரை தளம் 1092 சதுரடி + முதல் தளம் 1092 சதுரடி + இரண்டாவது தளம் 525 சதுரடி) மற்றும் இதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும். இத்துடன் அனைத்து சட்டங்கள், பொருத்திகள், மின் அமைப்புகள், மின் இணைப்பு மற்றும் மின் வைப்புத்தொகை, மின் இணைப்புக்கான தொகை மற்றும் அனைத்து வசதிகள் உட்பட. நான்கு எல்லைகள்: வடக்கில் - காலி நிலம், தெற்கில் - பெருமாள் கோவில் தெரு, கிழக்கில் - திரு.தேவராஜ் நிலம் மற்றும் கட்டிடம், மேற்கில் - திரு. ரெங்கநாதன் நிலம். இந்த 1240 சதுரடி நிலம், 2709 சதுரடி கட்டிடம் (தரை தளம் 1092 சதுரடி + முதல் தளம் 1092 சதுரடி + இரண்டாவது தளம் 525 சதுரடி) சொத்தானது தென்சென்னை பதிவு மாவட்டம், குன்றத்தூர் சார் பதிவு மாவட்டத்தை உள்ளடக்கியது.

**நிர்ணயிக்கப்பட்ட விலை: ரூ.80,00,000/-**
**(ரூபாய் எண்பது லட்சம் மட்டும்)**

டெண்டருடன் கூடிய மறு ஏல விற்பனை விபரம்

| மறு ஏல தேதி | ஏலம் நடைபெறும் இடம் |
|---|---|
| 16.04.2024 | சிட்டி யூனியன் வங்கி லிமிடெட், மதுரவாயல் கிளை, KRM டவர்ஸ், 4-A, பல்லவன் நகர் மெயின் ரோடு, சிங்காரவேலன் நகர், மதுரவாயல், திருவள்ளூர் - 600095 தொலைபேசி எண்: 044-23781805, செல் எண்: 9344038607 |

**டெண்டருடன் கூடிய மறு ஏல விற்பனைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:**
(1) விருப்பமுடைய டெண்டர்தாரர் / ஏலம் கேட்பவர், ஏலத்தில் பங்கு கொள்ள நேரில் ஆஜராக வேண்டும் மற்றும் தனக்காக ஏலம் கேட்பதாக எழுத்துப்பூர்வமான ஒரு உறுதிமொழியையும் அளிக்க வேண்டும். (2) விருப்பம் உடைய டெண்டர்தாரர் / ஏலம் கேட்க விரும்புவோர், டெண்டர் படிவங்களை மேனேஜர், சிட்டி யூனியன் வங்கி லிமிடெட், மதுரவாயல் கிளை, KRM டவர்ஸ், 4-A, பல்லவன் நகர் மெயின் ரோடு, சிங்காரவேலன் நகர், மதுரவாயல், திருவள்ளூர்-600095 விலாசத்தில் பெற்றுக் கொள்ளலாம். (3) விருப்பமுடைய டெண்டர்தாரர் / ஏலம் கேட்பவர் தங்களது விலை புள்ளிகளை நிர்ணயிக்கப்பட்ட டெண்டர் படிவத்தில் சீலிடப்பட்ட உறைகளில் வைத்து, அத்துடன், சிட்டி யூனியன் வங்கி லிமிடெட் என்கின்ற பெயரில் பெறப்பட்ட நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச விலையின் 10% தொகைக்கான Pay Order / கேட்பு வரைவோலையினை பிணைவைப்புத் தொகையாக இணைத்து "அதிகாரப்பூர்வ அதிகாரி, சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்" என முகவரியிட்டு, இங்கு அறிவிக்கப்பட்டுள்ள டெண்டருடன் கூடிய மறு ஏல விற்பனை தேதியன்று மதியம் 12:00 மணி அல்லது அதற்கு முன்னதாக சமர்ப்பிக்க வேண்டும். (4) விருப்பமுள்ள டெண்டர்தாரர் ஏலம் கேட்பவர் சொத்துக்களை பார்வையிடவும் மற்றும் இதர விபரங்களுக்கும் தொலைபேசி எண்:044-23781805, செல் எண்:9344038607- ஐ தொடர்பு கொள்ளவும். (5) இந்த சொத்து(க்கள்) "இருக்கின்ற இடத்தில்", "இருக்கின்ற நிலையில்" மற்றும் "இருக்கின்ற வட்டுடன்" என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும். (6) சீலிடப்பட்ட டெண்டர்கள் விருப்பமுள்ள ஆஜராகியுள்ள டெண்டர்தாரர்கள் முன்னிலையில் இங்கு அறிவிக்கப்பட்டுள்ள டெண்டருடன் கூடிய மறு ஏல விற்பனை தேதி அன்று மதியம் 01.00 மணிக்கு திறக்கப்படும். பொதுவாக மூடப்பட்ட நிலையிலான டெண்டர் விற்பனையாக இருந்தபோதிலும், மூடப்பட்ட நிலையிலான டெண்டரில் குறிப்பிடப்பட்டுள்ள விலைபுள்ளியைக் காட்டிலும் கூடுதலாக ஏலம் கோர விரும்புவோர்களின் விருப்பத்தின் பேரில் அதிகாரபூர்வ அதிகாரியின் கட்டளையின் பேரில் வெளிப்படையான திறந்த ஏலத்தினை நடத்திடலாம். இந்த நிலையில் அதிக பட்சம் ஏலம் கேட்பவருக்கு, இந்த விற்பனை வழங்கப்படும் எனினும் இந்த விற்பனை சிட்டி யூனியன் வங்கியினால் உறுதி செய்யப்பட வேண்டும். (7) வெற்றி பெறும் டெண்டர்தாரர் / ஏலம் கேட்பவர் விற்பனை நிலையில் 25% தொகையை (பிணை வைப்புத் தொகை செலுத்தியது உள்பட) விற்பனை உறுதி செய்யப்பட்ட உடனேயே செலுத்த வேண்டும். மீதி 75% தொகையை விற்பனை உறுதி செய்யப்பட்ட நாளிலிருந்து 15 நாட்களுக்குள்ளாக செலுத்த வேண்டும். மேற்குறிப்பிட்டபடி செலுத்த தவறினால் அவரால் செலுத்தப்பட்ட 25% தொகை முழுவதும் அவர் இழக்க நேரிடும். (8) குறிப்பிடப்பட்டுள்ள கால வரையறைக்குள் மொத்த விற்பனை தொகையும் பெற்றுக் கொண்ட பின்னரே, வெற்றி பெற்ற டெண்டர்தாரர் / ஏலதாரருக்கு அதிகாரபூர்வ அதிகாரியால் விற்பனை சான்றிதழ் (Sales Certificate) வழங்கப்படும். (9) பத்திரச் செலவு, பதிவு கட்டணம், சட்டப்படியான மற்ற செலவுகளையும் வெற்றிபெற்ற ஏலம் கேட்பவரே ஏற்கவேண்டும். (10) அரசு, அரசு நிறுவனம் மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களுக்கான சொத்து சம்பந்தப்பட்ட சட்ட பூர்வ வீட்டு வரி, மின்சார கட்டணம் மற்றும் TDS, GST மற்றும் இதர பாக்கிகளை வெற்றிபெறும் ஏலம் கேட்பவரே செலுத்த வேண்டும். (11) எந்த வித காரணமும் கூறாமல் விலைப்புள்ளிகளை ஏற்க அல்லது நிராகரிக்க அல்லது விற்பனையை ரத்து செய்ய அதிகாரபூர்வ அதிகாரிக்கு முழு உரிமை உண்டு

இடம் : கும்பகோணம், தேதி : 26.03.2024 அதிகாரப்பூர்வ அதிகாரி

பதிவு அலுவலகம் : எண்.149, T.S.R. (பெரிய) தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு - 612001, CIN : L65110TN1904PLC001287,
போன்: 0435 - 2402322, ஃபேக்ஸ் : 0435 - 2431746, இணையதளம் : www.cityunionbank.com


## ஐதராபாத்தில் நடந்த பூப்பந்து போட்டியில்

# தமிழ்நாடு காவல்துறை அணி சாதனை

### டிஜிபி சங்கர் ஜிவால் பாராட்டு

சென்னை, மார்ச் 27: தெலங்கானா மாநிலம் ஐதராபாத்தில் கடந்த 17ம் தேதி முதல் 22ம் தேதி வரை நடந்த 16வது அகில இந்திய காவல்துறைக்கு இடையேயான பூப்பந்து போட்டிகள் நடந்தன. தமிழ்நாடு காவல்துறை சார்பாக கூடுதல் டிஜிபி வினித்தேவ் வான்கடே தலைமையில் 26 அதிகாரிகள் மற்றும் காவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்த போட்டியில் கூடுதல் டிஜிபி வினித்தேவ் வான்கடே, ஐஜி ராஜேஸ்வரி ஆகியோர் கலப்பு இரட்டையர் போட்டியில் வெண்கல பதக்கம் வென்றனர். இன்ஸ்பெக்டர் ஜானகி மற்றும் இன்ஸ்பெக்டர் ஹேமமாலா ஆகியோர் பெண்கள் இரட்டையர் போட்டியில் தங்கப்பதக்கம் வென்றனர்.

மேலும், இன்ஸ்பெக்டர் ஹேமமாலா பெண்கள் ஒன்றையர் பிரிவில் தங்கப்பதக்கமும், இன்ஸ்பெக்டர் ஜானகி பெண்கள் ஒற்றையர் பிரிவில் வெள்ளி பதக்கமும் பெற்றனர். இன்ஸ்பெக்டர் வெங்கடேசன் ஒன்றையர் பிரிவில் வெண்கலப் பதக்கமும், ஆயுதப்படையின் ஆவில்தார் எழிலரசன் மற்றும் காவலர் பிரபாகரன் சென்னை பெருநகர காவல்துறை காவலர் ஹேமராஜ் மற்றும் கார்த்திக் ஆகியோர் குழு போட்டியில் வெண்கல பதக்கமும் வென்றுள்ளனர்.

போட்டிகளின் முடிவில் தமிழ்நாடு அணியினர் 2 தங்கம், 1 வெள்ளி, 4 வெண்கலம் உள்பட மொத்தம் 7 பதக்கங்களை வெற்று தமிழ்நாட்டிற்கும், தமிழ்நாடு காவல்துறைக்கும் பெருமை சேர்த்துள்ளனர். பதக்கம் வென்றவர்களுக்கு தமிழ்நாடு காவல்துறை டிஜிபி சங்கர் ஜிவால் மற்றும் ஆயுதப்படை கூடுதல் டிஜிபி ஜெயராமன் ஆகியோர் பாராட்டு தெரிவித்தனர்.

# எச்.ராஜாவின் கனவை தகர்த்த அண்ணாமலை



> அரசியல் அத்தியாயத்தை முடித்து வைத்து விட்டார் என்று ஆதரவாளர்கள் கொந்தளிப்பு

சென்னை, மார்ச் 27: சிவகங்கை தொகுதியை கூட்டணிக்கு தாரை வார்த்து எச்.ராஜாவின் கனவை அண்ணாமலை உடைத்து விட்டதாக அவரது ஆதரவாளர்கள் கொதிப்படைந்துள்ளனர்.

பாஜகவில் அதிக வயதுள்ள (72) பொன்ராதாகிருஷ்ணனுக்கு கன்னியாகுமரி தொகுதியில் போட்டியிட மீண்டும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதே போல ஒன்றிய இணை அமைச்சர் எல்.முருகன் நீலகிரி தொகுதியிலும், பாஜ தலைவர் அண்ணாமலை கோவை தொகுயிலும், சட்டப்பேரவை பாஜ தலைவர் நயினார் நாகேந்திரன் திருநெல்வேலி தொகுதியிலும், ஏ.பி.முருகானந்தம் திருப்பூர் தொகுதியிலும், தஞ்சாவூர் தொகுதியில் கருப்பு எம்.முருகானந்தமும் களமிறக்கப்பட்டுள்ளனர்.

தமிழிசை சவுந்தரராஜனை, உடனடியாக கட்சியில் சேர்த்து தென்சென்னை தொகுதியில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்பட்டது. சில வாரங்களுக்கு முன் தன்னுடைய கட்சியை பாஜவில் இணைத்த சரத்குமாரின் மனைவி ராதிகா சரத்குமாருக்கு கூட விருதுநகர் தொகுதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால், பாஜ தலைமையில் பேச்சுவார்த்தை நடத்த அமைக்கப்பட்ட 7 பேர் குழுவில் இடம் பெற்றிருந்த எச்.ராஜாவுக்கு மட்டும் சீட் வழங்கப்படவில்லை. பாஜவில் மாநில தலைவர், தேசிய செயலாளர், தேசிய செயற்குழு உறுப்பினர் உள்ளிட்ட கட்சியில் மிகப்பெரிய பதவியில் இருந்த எச்.ராஜாவின் பெயர் இடம் பெறவில்லை.

வழக்கமாக தான் போட்டியிடும் சிவகங்கை தொகுதி தனக்கு கிடைக்கும் என்று எச்.ராஜா எதிர்பார்த்தார். ஏனென்றால் அந்த தொகுதியில் எச்.ராஜா 1999, 2014, 2019 ஆகிய தேர்தல்களில் போட்டியிட்டார். இந்நிலையில் யாரும் எதிர்பார்க்காத நிலையில் அந்த தொகுதி பாஜவின் கூட்டணி கட்சியான இந்திய மக்கள் கல்வி முன்னேற்றக் கழகத்துக்கு ஒதுக்கப்பட்டது. இதனால் அவர் கடும் அதிர்ச்சியடைந்தார்.

தான் போட்டியிட முடிவு செய்து இருந்த தொகுதியை வேறு ஒருவருக்கு தாரைவார்த்து கொடுத்த பாஜ தலைவர் அண்ணாமலை மீது எச்.ராஜா கடும் கோபத்தில் இருந்து வருகிறார். பாஜவை வளர்த்த தனக்கு சீட் இல்லையா? என்று அவர் கடும் வருத்தத்தில் இருந்து வருகிறார்.

தன்னை விட கட்சியில் ஜூனியர்களுக்கு சீட் வழங்கும்போது, நான் எந்த வகையில் குறைந்து போய் விட்டேன் என்று கடும் அதிருப்தியில் இருந்து வருகிறார். ஏற்கனவே, தன்னுடன் பாஜவில் பணியாற்றி வந்த இல.கணேசன், சி.பி.ராதாகிருஷ்ணன் ஆகியோர் கவர்னர் ஆக்கப்பட்டனர். தனக்கும் கவர்னர் பதவி கிடைக்கும் என எச்.ராஜா நினைத்து இருந்தார். ஆனால், கடைசி வரை அவருக்கு கவர்னர் பதவியும் வழங்கப்படவில்லை. இப்போது எம்பி சீட்டும் கிடைக்கவில்லை. தற்போது எச்.ராஜாவுக்கு 67 வயது ஆகிறது. இனிமேல் வர உள்ள சட்டப்பேரவை தேர்தலில் கூட சீட் கிடைக்குமா? என்பதும் சந்தேகம் தான். அதே போல எம்பி கனவும் பாழாகி விட்டது. எச்.ராஜாவின் அரசியல் வாழ்க்கை 'இலவு காத்த கிளி போல' ஆகிவிட்டதே என்று அவரது ஆதரவாளர்கள் புலம்பி வருகின்றனர்.


OMKARA ASSETS RECONSTRUCTION PVT LTD.
**ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட்**
**CIN: U67100TZ2014PTC020363**
கார்ப்பரேட் அலுவலகம்: கோஹினூர் ஸ்கொயர், 47வது தளம், N.C. கேல்கர்மார்க் R.G.கட்காரி சவுக், தாதர் (மேற்கு), மும்பை–400028. அதிகாரபூர்வ அதிகாரி கைபேசி எண். +91 9884062068/+91 9344684194. மின்னஞ்சல்: karthi.govindasamy@omkaraarc.com

[பிற்சேர்க்கை-IV-A]
[விதி 8(6) r/w 9(1) விதிகளை காணவும்]
**அசையா சொத்து விற்பனைக்கான மின்-ஏலம் பொது அறிவிப்பு**

**கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) r/w 9(1) விதிகளுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 ("சர்பாசி சட்டம்") கீழ் அசையும்/ அசையா சொத்துகள் விற்பனைக்கான மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு**

இதன்மூலம் பொதுவாக பொதுமக்களுக்கும் இதன்கீழ் பெயரிடப்பட்ட கீழ்க்குறிப்பிட்ட கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்கு குறிப்பிட்டும் வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே விவரிக்கப்பட்ட அசையா சொத்துகள் கடனீட்டு கடனீந்தோருக்கு அடமானம் / உரிமை அளிக்கப்பட்டது, அது ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பி. லிட்., (OARPL), மேலும் கீழே உள்ள கணக்குகளின் முழு நிலுவையில் உள்ள கடன்களையும் ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பி. லிட் (OARPL) (ஓம்காரா PS 22/2020–21 ஒப்பந்தங்கள் மூலம் பொறுப்பாட்சியின் பொறுப்பாளராக அதன் திறனில் செயல்படும்) உடமைப் பத்திர ஒப்பந்த தேதி 26.02.2021 யிலிருந்து ஃபுல்லர்டோன் இந்தியா ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட் (உரிமைப்பட்ட நிறுவனம்) இன்படி OARPL இன் அதிகாரப்பூர்வ அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டுள்ளது. அதற்கிணங்க, OARPL ஆனது நிலுவைகளை வசூலிக்க மேலும் கடனீடுகளை அமலாக்கம் செய்ய உரிமை பெற்றுள்ளது பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டத்தின் பிரிவுகள் 13(2) மற்றும் (4) சர்பாசி விதிகளின் கீழ் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி; கீழ்க்காணும் சொத்தை சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து கடனீட்டு கடனீந்தோராக OARPL நிலுவையில் கீழ்க்காணும் சம்பந்தப்பட்ட நிரலில் காணும் தொகையை மீட்பதற்காக, "உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு" மேலும் "உள்ளது எதுவோ அது" மற்றும் "உதவிசாரா அடிப்படையில்" விற்பனை செய்யவுள்ளது. பிரிவு 13(2) இன் கீழ் அனுப்பப்பட்ட கோரிக்கை அறிவிப்பின்படி சம்பந்தப்பட்ட கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/ அடமானதாரர்கள் விவரம், கடனீட்டு கடனீந்தோர், உரிமையாளர், நிலுவைத் தொகை, சொத்தின் சுவாதீன தேதி, நிர்ணய விலை, ஏலம் உயர்த்தும் தொகை, முன்வைப்புத்தொகை, நாள் மற்றும் நேரம் ஆகியவை கீழே சம்பந்தப்பட்ட நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளன.

| கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/ அடமானதாரர்களின் பெயர் | திரு.மணி M.S மற்றும் திருமதி. ராம்பள்ளி சூரியலக்ஷ்மி பவானி |
|---|---|

திரு.மணி M.S. த/பெ: திரு. M.S.V. சிரஞ்சீவி ராவ் ஆகியோரின் சொத்தானது கூடுவாஞ்சேரி சார் பதிவு அலுவலகத்தில் 10.12.2012 இல் தேதியிடப்பட்ட விற்பனை பத்திர ஆவண எண்.13980/2012. அனைத்து துண்டு மற்றும் பகுதி நிலம் வீட்டு மனை, கொண்ட கடை எண்.C. பகுதியாக உருவாக்கம் "ஜவஹரையா நகர்" (மனைப்பிரிவு அங்கீகாரம் எண்.CSAR/DTCPM No.86/128,LP/103) உள்ளடக்கிய சர்வே எண்.362 (பகுதி) அமைந்துள்ள பழைய எண்.193 புதிய எண்.112, ஆதனூர் கிராமம், 2910 சதுரஅடி பரப்பளவுள்ள, தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் கூடுவாஞ்சேரி சார்பதிவு மாவட்டத்தில் அமைந்துள்ள (திட்டமிடல் அனுமதி எண்.78/2011–2012 லிருந்து ஆதனூர் பஞ்சாயத்து) எல்லைகள்: வடக்கு: 40 அடி சாலை, தெற்கு: டி.டி.சி.இ நகர், கிழக்கு: கடை – D, மேற்கு: கடை–B, அளவீடு:– கிழக்கிலிருந்து மேற்காக வடக்கு பக்கம்: 60 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்கு பக்கம்: 60 அடி, வடக்கிலிருந்து தெற்காக கிழக்கு பக்கம்: 48 அடி 6 அங்குலம், வடக்கிலிருந்து தெற்காக மேற்கு பக்கம்:– 48 அடி 6 அங்குலம்.
அட்டவணை B:– 307 சதுர அடி பிரிக்கப்படாத நிலம் அட்டவணைக்கு உள்ளேயும் வெளியேவும் உள்ள சொத்து.
அட்டவணை C:– முதல் தளத்தில் ஆர்சிசி கூரை உள்ள கட்டிடம், பிளாக் எண்.C2, பிளாட் எண்.B2 அளவீடுள்ள 682 சதுரஅடி "சாய்சரண் அவென்யூ" உள்ள "ஜவஹரையா நகர்" கட்டப்பட்டுள்ள அட்டவணை A வில் உள்ள கட்டடம்.

| | |
|---|---|
| சொத்தின் உரிமையாளர் | திரு.மணி M.S. |
| கோரிக்கை அறிவிப்பு நாள் | 27.07.2020 |
| கையக சுவாதீன நாள் | 12.12.2022 |
| நிர்ணய விலை (இலட்சத்தில்) | ரூ. 18,50,000/– (ரூபாய் பதினெட்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) |
| முன்வைப்பு தொகை | ரூ. 1,85,000/– (ரூபாய் ஒரு இலட்சத்து எண்பத்து ஐந்தாயிரம் மட்டும்) |
| ஏலம் உயர்த்தும் தொகை | ரூ. 10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) |
| சொத்து பார்வையிடல் மற்றும் நேரம் | 03.04.2024 காலை 11 மணி முதல் நண்பகல் 12 மணி வரை |
| 25.03.2024 வரை உள்ள நிலுவை தொகை | ரூ. 36,07,251.58/– (ரூபாய் முப்பத்தாறு இலட்சத்து ஏழாயிரத்து இருநூற்று ஐம்பத்து ஒன்று மற்றும் பைசா ஐம்பத்து எட்டு மட்டும்) |
| கணக்கு விவரம் | கணக்கு எண்:– 344905000929, பயனாளி பெயர்:– ஓம்காரா PS22/2020–21, டிரஸ்ட், வங்கி பெயர்: ஐசிஐசிஐ வங்கி, கிளை: பாந்த்ரா (கி) மும்பை, ஐஎப்எஸ்சி குறியீடு: ICIC0003449 |
| மின் – ஏலத்தேதி மற்றும் நேரம் | 17 ஏப்ரல் 2024 (புதன்கிழமை) காலை 11 மணி முதல் நண்பகல் 12 மணி வரை |
| ஏல விண்ணப்பங்களை சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம்/ கேஒய்சி ஆவணம்/ முன்வைப்பு தொகையின் ஆதார ஆவணம் | 15 ஏப்ரல் 2024 மாலை 4 மணி அல்லது அதற்கு முன்பாக |

ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்: விற்பனை விண்ணப்பத்தின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கடனீட்டு கடனீந்தோரின் (OARPL) இணையதளம் அதாவது http://omkaraarc.com/auction.php அல்லது சேவை வழங்குநரின் இணையதளம் அதாவது https://www.bankeauctions.com ஐ பார்வையிடவும்

**கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) r/w 9(1) விற்பனைக்கான சட்டப்பூர்வ அறிவிப்பு**

இந்த அறிவிப்பு மேற்கூறிய கடன் கணக்கின் கடன்தாரர் / ஜாமீன்தாரர்களுக்கு கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6), r/w 9(1) மற்றும் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 விதிகளின் கீழ், செலவு & செலவினங்களுடன் சேர்த்து இங்கே மேற்குறிப்பிட்டவாறு நிலுவைத்தொகைகளை செலுத்தி, அவர்கள் விரும்பினால் சொத்துகளை மீட்கும் அறிவுறுத்தலுடன் மேற்குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் பொது ஏலம் மூலம் விற்பனை நடைபெறுவது குறித்து தகவல் அளிக்கும் 15 (பதினைந்து) நாட்கள் கட்டாய அறிவிப்பும் ஆகும். பணம் செலுத்தத் தவறினால், நிதிச்சொத்துக்களை மீட்டெடுப்பதற்கான ஆலோசனையுடன் புனரமைத்தல் மற்றும் 26.03.2024 முதல் கூடுதல் வட்டியுடன் சொத்துகளை மீட்டெடுப்பதற்கான ஆலோசனையுடன் மின்–ஏலத்தின் மூலம் செயல்படுத்தவும் அதிகாரப்பூர்வ அதிகாரி /கடனீட்டு கடனீந்தோரின் தனிவிருப்ப முடிவில் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(5) கீழ் வரையறுக்கப்பட்டவாறு ஏதேனும் முறைகள் மூலம் விற்பனை செய்யப்படும்.

நாள்: 27.03.2024
இடம்: சென்னை
கார்த்தி கோவிந்தசாமி
அதிகாரப்பூர்வ அதிகாரி,
கைபேசி எண். 9344684194
ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பி. லிட்.
(ஓம்காரா பிஎஸ் 22/2020–21 பொறுப்பாட்சியின் பொறுப்பாளராக அதன் திறனில் செயல்படுகிறது)